# குளித்தலை நகராட்சி

31.01.2020.ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்(பொ)
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) திரு.ந.புகழேந்தி அவர்களின் ஜனவரி 2020.ஆம் மாத தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/ஜே3, நாள்–04.12.2018.ல், குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டம், தனியார்மயப்படுத்துதலின்கீழ் 52–தனியார் துப்புரவு பணியாளர்களை விநியோகிக்க திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பின்மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள உத்தரவு அளிக்கப்பட்டு 31.01.2019.ல் PRG Construction நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இப்பணிக்காலம் 31.01.2020.ல் முடிவடைய உள்ளது. மேலும், மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணைர் அவர்களின் உத்தரவின்படி 2019–2020 ஆண்டுக்கு 52–தனியார் துப்புரவு பணியாளர்களை நியமித்துக்கொள்ள திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி அழைப்பின்மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்துக்கொள்ள, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களி 2019–2020.ஆம் ஆண்டுக்கு தரப்படுத்தப்பட்ட அட்டவணைப்படி ஒரு பணியாளருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.364/– அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி 52–நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.364/– வீதம் உத்தேச செலவினம் கீழ்க்கண்டுள்ளவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.364// வீதம் 52 நபர்களுக்கு 365 நாட்களுக்கு | | | = | 6908720.00 |
| 2) | கூடுதல் 10 சதவீதம் (இ.எஸ்.ஐ., இ.பி.எப்., காப்பீடு, சீருடைகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் | | | | |
| | ESI 30% | = | 328164.20 | | |
| | EPF 30% | = | 905042.32 | | |
| | Uniforms 20% | = | 207261.60 | | |
| | Health Safety Equipments 20% | = | 276348.80 | | |
| | Total | = | 1716816.92 | = | 1716816.92 |
| | | | | | 8625536.92 |
| 3) | Insurance 2% நிர்வாக செலவினம் | | | = | 138174.40 |
| 4) | கூடுதல் 5% சேவை வரி | | | = | 0 |
| 5) | கூடுதல் 1% நிர்வாக செலவினம் | | | = | 690872.00 |
| | ஆகமொத்தம் | | | = | **9454583.32** |

மேற்கண்ட கணக்கீட்டின்படி ரூ.94,54,583/– உத்தேச செலவினத்தில் தனியார்மூலம் துப்புரவு பணிகள் ஒப்படைக்க ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விடுக்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளிகோர அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட உத்தேச செலவுத்தொகை ரூ.94,54,583/– இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.24/2020/எச்1)

பொருள்–03. குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்ட முதன்மை சேகரிப்பு பணிக்கு, 14 பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளது. அவற்றின் சார்ஜர் நீளம் குறைவாக உள்ளதால், புதிய மின் உபகரணங்கள், அவசர அவசியம் கருதி, ஜே.எல்.எலக்ட்ரிகல்ஸ், குளித்தலை நிறுவனத்தில் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ.2515/–ஐ, செலவினம் மேற்கொண்ட துப்புரவு ஆய்வர் திரு.இஸ்மாயில் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.40/2020/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜே3, நாள்–04.12.2018.ல் செயல்முறைகளில் மூன்று ஆண்டுகளுக்கு 52 நபர்களை தனியார் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதி உத்தரவு அளிக்கப்பட்டு, நாள்–31.01.2019 PRG Construction நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு ஒரு ஆண்டுகளாக துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இப்பணிக்காலம் நாள்–31.01.2020.ல் முடிவடைய உள்ளது. 01.02.2020 முதல் மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 2019–2020.ஆம் ஆண்டுக்கு அனுமதிக்கப்படும் தினக்கூலி ரூ.364/– அடிப்படையில் துப்புரவு பணி செய்ய அனுமதிக்கவும், மேற்கண்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்தரவின்படியும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயப்டுத்த உத்தரவில் கண்டுள்ளவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு, 2019–2020 ஆண்டிற்கு 52 தனியார் துப்புரவு பணியாளர்களை துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், தனியார்வசம் துப்புரவு பணிகள் ஒப்படைக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் பொது நிதி மற்றும் திட்ட நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.24/2020/எச்1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை தனியார்மயமாக்குதலின் திட்டத்தின்மூலம், தனியார் நிறுவனங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள்–26.10.2017 மற்றும் அரசாணை(நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–23.11.2016.ன்படி, நாள்–01.02.2020 முதல் 1–வருட காலத்திற்கு இந்நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.730000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.25/2020/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சிப் பகுதிகளில் பெரியாலம் அருகில் உள்ள பழுதடைந்த சாலை மற்றும் குயவர்தெரு, முசிறி சாலை அருகில் உள்ள பழுதடைந்த சாலைகளை பொதுமக்கள் நலன்கருதி, உடன் கான்கிரீட் தளம் அமைத்து சரிசெய்ய ரூ.1.10 லட்சம் செலவின மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அவசர அவசியம் கருதி, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.எம்.செந்தில்குமார் அவர்களுக்கு, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ், பணி உத்தரவு வழங்கியது மற்றும் பட்டியல் தொகை ரூ.1,05,011/– வழங்கியதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2565/2019/இ1)

பொருள்– 07. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்காக, கொசு புழுக்களை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலை பட்டியலின்படி, தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தினக்கூலி பணியாளர்களுக்கு 2019–2020 வருட ஊதிய உயர்வு அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/4455/2019, நாள்–20.07.2019.ன்படி தினக்கூலி தொகை ரூ.328/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2).இச்செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அதற்கான ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படி வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

..3..

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 4 துப்புரவு பணியாளர்களை 1 வருடத்திற்கு சப்ளை செய்யும் பணிக்கு ரூ.7.30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நாள்–08.01.2020.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று 29.01.2020.ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | குறிப்பிட்டுள்ள விலை ரூ. (1 நபருக்கு நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1) | திரு.சி.கண்ணன், ஒப்பந்ததாரர், ராசாக்கவுண்டனூர், கரூர். | ரூ.505/– |
| 2) | அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், நெ.55,புனிதா காம்ப்ளக்ஸ், குளித்தலை. | ரூ.501/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட பணிக்கு குறித்த விலைப்புள்ளியை மதிப்பீட்டைவிட கூடுதலாக ரூ.501/– வழங்கியுள்ள M/s.அம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ், குளித்தலை என்னும் நிறுவனத்திடம் விலையை குறைத்து கொடுக்க கோரியதில், தற்பொழுது நடைமுறையில் இதைவிட கூடுதலாக கூலி வழங்கப்பட்டு வருவதால் இதைவிட குறைத்து கொடுக்க இயலாது என்று தெரிவித்துள்ளனர். எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் நகராட்சிக்கு ஏற்படும் பொருள் விரயம் மற்றும் கால விரயம் ஆகியவற்றை கருத்தில்கொண்டும் பள்ளி மாணவ மாணவிகள் நலன் மற்றும் அவசர அவசியம் கருதியும் இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.25/2020/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளை தனியார்மயமாக்குதலின் திட்டத்தின்மூலம் தனியார் நிறுவனங்களை நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/2016/ஜே2, நாள்–26.10.2027 மற்றும் அரசாணை(நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்–23.11.2016.ன்படியும், இந்நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளிகளில் கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.4128/2018/எச்1.ன்படி, 31.01.2019.ல் PRG Constructions நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து மேற்கண்ட பணிகள் செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.01.2020.ல் முடிவடைய உள்ளது. மேலும், கழிவறை பராமரிப்பு மற்றும் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் செய்ய ஓராண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகோரி பணி மேற்கொள்ளும் வரை ஏற்கனவே பணிபார்த்துவரும் PRG Constructions நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்ளவும், 2019–2020.ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படியும், தினக்கூலி செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கும்வரை ஏற்கனவே பணிபார்த்துவரும் PRG Constructions நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்ளவும் இச்செலவினம் கல்விதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.4128/2018/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை, ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜே3, நாள்–04.12.2018.ல் செயல்முறை உத்தரவு அனுமதி அளிக்கப்பட்டு 31.01.2019.ல் PRG Constructions கரூர் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டு தொடர்ந்து துப்புரவு பணி செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் 31.01.2020 முடிவடைய உள்ளது. எனவே, 2019–2020.ஆம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் 52 தனியார் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிகள் செய்ய ஒப்பந்தப்புள்ளிகோரி தனியார்வசம் துப்புரவு பணிகள் ஒப்படைக்கும்வரை இந்நகராட்சி பொதுமக்களின் பொது சுகாதார நலன்கருதி, தொடர்ந்து PRG Constructions கரூர் நிறுவனத்தின்மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளவும் 2019–2020.ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படியும் தினக்கூலி செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலம்.
2). இச்செலவினம் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

*******

# குளித்தலை நகராட்சி

31.01.2020.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 216 | பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 217 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 3 | 3 | 218 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 219 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 5 | 5 | 220 | மன்ற அனுமதி அளிக்கப்பட்டது. |
| 6 | 6 | 221 | பதிவு செய்யப்பட்டது. |
| 7 | 7 | 222 | அனுமதி அளிக்கப்பட்டது. |
| 8 | 8 | 223 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 9 | 9 | 224 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 225 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ந.புகழேந்தி,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.